# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● செப்டம்பர் 11, 2021

Weekly E-paper ● September 11, 2021




## தமிழ்நாடு அரசின் செயல்பாடு சரியில்லை!

● சுப.வீரபாண்டியன்

### செப்டம்பர் 17, ‘சமூக நீதி நாள்’ முதல்வர் அறிவிப்பு

ஆ.சிங்கராயர்

### வரவேற்போம் ‘பெரியார் உலகம்’

தலையங்கம்

### குடியுரிமைச் சட்டத்திற்கு எதிரான தீர்மானம்

சாரதா தேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● செப்டம்பர் 11, 2021    Weekly E-paper ● September 11, 2021


# தமிழ்நாடு அரசின் செயல்பாடு சரியில்லை!

● சுப.வீரபாண்டியன்

இன்றைய திமுக அரசின் மீது ஏதேனும் குறை சொல்லிவிட வேண்டும் என்ற அவசரத்தில், சரியாக எழுத்துக் கூட்டிப் படிக்கவும் பொறுமை இல்லாத நண்பர்கள் சிலர், சங்க இலக்கியத்திற்கு எப்படித் திராவிடக் களஞ்சியம் என்று பெயர் வைக்கலாம் எனக் கேட்டு எகிறிக் குதித்தார்கள். அமைச்சர் தங்கம் தென்னரசு, அறிவிப்பைச் சரியாகப் படித்திடுக என்று சுட்டிக் காட்டியபின், எங்களைக் கண்டு பயந்து விட்டார்கள் என்று கூறி அந்த மன நோயாளிகள் சற்று ஓய்ந்தனர்.

அடுத்ததாக, தந்தை பெரியார் பிறந்த நாளான செப்.17 ஆம் நாளை சமூக நீதி நாள் என்று முதல்வர் அறிவித்தார். அதனை வெளிப்படையாக எதிர்க்க முடியாதவர்கள், “உள்ளே அழுகிறேன், வெளியே சிரிக்கிறேன்” என்னும் கதையாக அதனை வரவேற்றுப் பேசினார்கள். இருப்பினும், பாஜக தமிழ் மாநிலத் தலைவர், “வ.உ.சி., பாரதியார் போன்றவர்களை எல்லாம் விட்டு விட்டீர்களே” என்று நீலிக் கண்ணீர் வடித்தார்.

சில நாள்களுக்கு முன்புதான், கடந்த 5 ஆம் தேதி, செக்கிழுத்த செம்மலின் 150 ஆவது பிறந்தநாள் தொடக்கத்தை ஒட்டிச் சட்டமன்றத்தில் பல்வேறு அறிவிப்புகளை முதல்வர் வெளியிட்டிருந்தார் அதனைப் பார்க்க அண்ணாமலை அவர்களுக்கு நேரமில்லை போலும். அவர்கள் கட்சி ‘ராகவன்கள்’ வழக்கு ஏதேனும் புதிதாக வந்திருக்குமோ என்னவோ!

இப்போது பாரதியார் பிறந்த நாளையும் மகாகவி நாள் என்று அறிவித்துள்ளதோடு, அவருக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் பல்வேறு அறிவிப்புகளையும் சட்டமன்றத்தில் முதல்வர் வெளியிட்டுள்ளார். இனிமேல் அவரால் அது குறித்தும் பேச முடியாது.

நம்மைப் போன்றவர்களுக்குப் பாரதியாரின் கருத்துகளில் நிறையக் கருத்து வேறுபாடு உண்டு. அதிலும்



அவருடைய உரைநடையில் உள்ள செய்திகள் பல எதிர்க்கப்பட வேண்டியனவாகவே உள்ளன. இருப்பினும் அவர் ஒரு மகாகவி என்பதை யார்தான் மறுக்க முடியும்? அரண்மனைப் புலவர்களின் மொழியாக இருந்த தமிழை, அனைத்து மக்களின் மொழியாகவும் மாற்றியவர் பாரதிதானே! 20 ஆம் நூற்றாண்டின் தமிழ்க்கவிதை நவீனத்திற்கு வித்திட்டவரும் அவர்தானே! எனவே அவருக்குரிய இடத்தையும் நம் முதல்வர் தளபதி கொடுக்கத் தவறவில்லை.

இன்றைய திமுக ஆட்சி பொறுப்பு ஏற்றதிலிருந்து நாமும் ஒன்றைக் கவனித்துக் கொண்டேதான் வருகிறோம். எதிர்க்கட்சியினரோ, எதிர்க்கருத்து உடையவர்களோ எந்த ஒரு குறையை எடுத்து வைத்தாலும், உடனே அதற்குச் சரியான மறுப்பு சொல்லப்படுகிறது அல்லது அந்தக் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படுகிறது.

இப்படித் தமக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் நன்மை செய்கின்ற ஓர் ஆட்சியாக இது இருக்குமானால், பிறகு எதிர்க்கட்சிகள் என்னதான் செய்வார்கள்? அவர்கள் பேசுவதற்கு ஒரு சிறிய இடமாவது கொடுக்க வேண்டாமா?

அரசு ஊழியர்களுக்கு அடுத்த ஏப்ரல் மாதம்தான் அகவிலைப்படி உயர்வு என்று நிதி அமைச்சர் சொன்னார். அதனை வைத்து, ஊழியர்களைத் தூண்டி ஒரு போராட்டத்திற்கு வழி வகுக்கலாம் என்று எதிர்க்கட்சியினர் திட்டமிட்டு முடிப்பதற்குள், வரும் ஜனவரி மாதமே அகவிலைப்படி உயர்வு தரப்படும், அதுவரையில் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று முதல்வர் கூறிவிட்டார். அவர்களும் அரசுக்கு நன்றி தெரிவித்து விட்டனர்.

பிள்ளையார் அரசியலைக் கையிலெடுக்கப் பார்த்தனர். அதற்கு மக்களிடம் எந்த ஆதரவும் இல்லை. “நாங்கள் எந்த மதத்திற்கும் எதிரானவர்கள் இல்லை. ஒன்றிய அரசின் வழிகாட்டலின்படி, கொரானா காலம் என்பதால்தான் இந்த அறிவிப்பு” என்று முதல்வர் சொன்னது சரிதான் என்று மக்களுக்குப் பட்டது.

ஆந்திராவில் குப்பை வண்டியில் ஏற்றப்பட்ட பிள்ளையார் சிலைகளைப் படம் பிடித்துப் போட்டு, “இதோ பாருங்கள் திமுக அரசின் இந்து விரோதப் போக்கை” என்றனர். அடுத்த அரை மணி நேரத்தில் உண்மை வெளிவந்துவிட்டது. மீண்டும் அதே பொய்யைச் சொன்னால் மக்கள் காறித் துப்பி விடுவார்கள் என்பதால், பொய் பேசிய நண்பர்கள் வாயை மூடிக் கொண்டார்கள்.

இப்படி எல்லாக் கதவுகளையும் மூடுவது என்ன நியாயம்? தாமரை இங்கு மலராது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதற்காக, தலைகாட்டவே முடியாத நிலையை ஏற்படுத்துவதை எப்படிச் சரி என்று சொல்ல முடியும்? வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கொடுத்து, மாம்பழம் நிலையையும் நம் முதல்வர் மோசமாக்கி விட்டார்.

இப்படியாக, பூ, இலை, பழம் என எல்லாவற்றையும் ஒன்றுமில்லாமல் ஆக்குவதை எப்படி ஏற்க முடியும்? ஆம், தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் ஒன்றுகூடச் சரியில்லை!

●

# செப்டம்பர் 17, ‘சமூக நீதி நாள்’ முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு !

● ஆ. சிங்கராயர்

அரசியலில் தலைவரைத் தொண்டர்களும், தொண்டரகளைத் தலைவர்களும் நன்கு புரிந்து வைத்துள்ளார்கள் என்பதை மறுக்க முடியாது.

என் தலைவன் இப்படித்தான் என்று அடித்துச் சொல்லும் தொண்டர்களை உலக அரசியல் மட்டுமல்ல நம் தமிழக அரசியலும் கூட கண்டு வந்துள்ளது.



ஆனால் தொண்டர்களால் மட்டுமல்ல, கூடவே பயணிக்கும் தலைவர்கள் கூடப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குத் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் இவர்களிடம் மறைந்து கிடந்த சிந்தனைகளை, மனதளவில் நீண்ட நாட்களாகத் தேக்கி வைத்திருந்த நம் தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 06 - 09-2021 அன்று சட்டப்பேரவையில், விதி எண் 110-இன் கீழ் ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

“இந்தியா முழுவதும் சமூக நீதி பரவ தந்தை பெரியார் அமைத்த அடித்தளமே காரணம். பெரியாரின் செயல்கள் குறித்துப் பேச வேண்டும் என்றால் பத்து நாட்கள் அவையை ஒத்தி வைத்து விட்டுப் பேச வேண்டும். செப்டம்பர் 17 சமூக நீதி நாளன்று அனைத்து அரசு அலுவலகங்களில் உறுதி மொழி எடுக்கப்படும். யாரும் எழுதத் தயங்கியதை எழுதியவர். யாரும் பேசத் தயங்கியதைப் பேசியவர் பெரியார். இதனால் பெரியார் பிறந்த செப்டம்பர் 17 ஆம் தேதி “சமூக நீதி நாளாக”க் கொண்டாடப்படும் “ - என்ற முதல்வரின் இந்த அறிவிப்பு, உண்மையில் தமிழ்நாடு வரலாற்றில், பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு திருப்புமுனை அறிவிப்பாகவே அமைந்து விட்டது.



வழக்கமாக அரசியலுக்காகப் பாராட்டுவோர் என்பதைத் தாண்டி மக்களே பாராட்டித் தள்ளும் அளவுக்கு முதல்வரின் இந்த அறிவுப்பும், அவரின் அணுகுமுறையும் வேற லெவலாக இருக்கிறது.

தமிழை, தமிழ்நாட்டை, தமிழ்இனத்தை, தமிழ்மொழியை நேசித்தவர் தந்தை பெரியார்.

அவர் ஒரு பகுத்தறிவாளர். அதையும் தாண்டி அவர் கையில் எடுத்த சமூக நீதி தமிழ் நாட்டை மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தின் பல மாநிலங்களையே அதிர வைத்து விட்டது.

தந்தை பெரியார் முழுமையான கடவுள் மறுப்பாளர். கோயில்களுக்குள் இதுநாள் வரைப் புகுந்து கொண்ட பார்ப்பனர்கள், சூத்திரர்களுக்குப் புரியாத மொழியில் சொல்லி வந்த மந்திரங்களையும், அதைப் புரியாமலேயே கேட்டு வந்த மக்களையும், கோயிலுக்குள் நுழையத் தடை விதித்து அதற்குத் “தீட்டு” என்று ஒரு உதவாக்கரைக் காரணத்தையும் சொன்னார்கள். சொல்லப்போனால் கேரள மாநிலம் வைக்கம் கோயில் தெருக்களில் கூட நடக்கக் கூடாது என்று சொன்னார்கள்.

நாத்திகரான பெரியார் அதை எதிர்த்தார். பேச்சளவில் இல்லாமல் களம் இறங்கிப் பேராடி மக்களின் உரிமையைப் பெற்றுத் தந்த சமூக நீதிப் போராளி, தந்தை பெரியார்.

சாதி ஒழியவும், பெண்கள் மீதான ஆணாதிக்கத்திற்கு எதிராவும், சாதி ஒழிந்த சமநீதிக்காகவும் தன் வாழ்நாளெல்லாம் பாடுபட்டவர், தந்தை பெரியார்.

அத்தகைய நம் தந்தை பெரியாரை, அவர் பிறந்த நாளை ‘சமூக நீதி நாளாக’ அறிவித்ததோடு, தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு சமூகப் புரட்சிக்காரராக மக்கள் கொண்டாடும் ஒரு மாமனிதனை, அவரின் சிந்தனைகளை அழுத்தமாகப் பதிவு செய்துவிட்டார் தளபதி, முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள்.

அதிகாரம் வந்துவிட்டது என்பதற்காகத் தலைகால் புரியாமல் ஆடியோரைப் பார்த்த தமிழ்நாடு, முதன்முறையாக அதே அதிகாரத்தை வைத்துத் தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு என்ன செய்யலாம் என்று சிந்திப்பதற்கே மிகச் சிறந்த பொருளாதார அறிஞர்களை ஆலோசகர்களாக நியமித்து, மக்கள் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், தந்தை பெரியாரின் சமூக நீதியைப் புகழின் உச்சானிக்கொம்பிற்கே உயர்த்தியிருக்கிறார் முதல்வர் அவர்கள்.

தமிழ் நாட்டு அரசியல் என்பது ஒன்றிய அரசை மையப்படுத்தி கிட்டத்தட்ட அடிமைச் சேவகம் செய்யும் அளவுக்கு செயல்பட்டால்தான் இயங்க முடியும் என்பதை மாற்றினார்.

“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் “

என்பது திருவள்ளுவரின் வாக்கு.

இது வேறு எவருக்கு ஒத்துப் போகிறதோ, இல்லையோ நம் முதல்வருக்கு முழுமையக ஒத்துப் போகிறது

ஆம் ! தமிழர்களுக்கும் ஓர் குணமுண்டு.

தான் பெற்றதை, கற்றதைத் தனக்காக மட்டும் வைத்துக்கொள்ளாமல், பிறருக்காகவும், சமுதாயத்திற்காகவும் திருப்பிக் கொடுப்பது என்பதில் பெயர் வாங்கியவர்கள் தமிழ்நாட்டுக்காரர்கள்.

தலைவரும், முதல்வருமான நம் தளபதி தாம் பெற்ற அனுபவத்தை, கற்ற அறிவை இந்தச் சமூதாயத்துக்கே திருப்பிக்கொடுத்துக் கொண்டிருக்கிறர் “பெரியார் பித்தனாக“ - அதற்கு ஒரு சான்று செப்டம்பர் 17, “ சமூக நீதி நாள்“ ! ●

## திண்டுக்கல் மாவட்ட அமைப்புக் கூட்டம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் திண்டுக்கல் மாவட்ட அமைப்புக் கூட்டம் செப்டம்பர் 5, 2021 ஆம் நாளன்று, திருச்சியில் நடைபெற்றது. பேரவையின் திருச்சிப் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களை ஏற்றுச் செயல்படுவது என்றும், செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தோழர்கள் புலேந்திரன், ஞானசேகர், ரவிச்சந்திரன், தமிழினியன், ஆனந்தராஜ், நடராசன், கணேசன், அரசு, எழிலன், ஜெயராமன், ஜெயச்சந்திரன், மணிவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மாநகரப் பொருளாளராக சேகர், மாவட்டத் துணைத்தலைவராக திராவிட அசுரன், துணைச்செயலளாராக விடுதலை ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

## திராவிடப் பள்ளி




**இரண்டாம் ஆண்டு தொடக்க விழா**

**18-9-2021**

**சனிக்கிழமை மாலை 6.00மணி**

**அன்பகம், தேனாம்பேட்டை**
**சென்னை- 600018**

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வரவேற்போம் “ பெரியார் உலகம்”



திராவிடர் கழகம் கடந்த ஆகஸ்ட் 30 ஆம் தேதி ஓர் அறிக்கையை வெளியிட்டது.

அதில் திருச்சிக்கு அருகில் சிறுகனூரில், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் சார்பில் அமைய இருக்கும் “பெரியார் உலக”த்தில் 95 அடி உயர சிலை அமைக்கப்படும், அதற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கி இருக்கிறது என்ற செய்தி இடம்பெற்றிருந்தது. இச்செய்தி சில ஏடுகளில் தவறாகவும் இடம் பெற்றிருந்தது.

பெரியார் உலகம், 27 ஏக்கர் நிலப்பரப்பில் தந்தை பெரியாரின் ஒலி, ஒளி காட்சிகளுடன் கூடிய அருங்காட்சியகம், அறிவியல் கண்காட்சி, கோளரங்கம், பெரியார் படிப்பகம், நூலகம், குழந்தைகளுக்கான விளையாட்டு, பொழுதுபோக்கு அம்சங்கள் அடங்கிய பூங்கா, சுவையான உணவகம், வாகன நிறுத்தத்துக்கு வசதிகள் என்று, அமைய இருக்கின்ற சிறப்புமிக்க உலகத்தில், 40 அடி பீடம், 95 அடி உயரத்தில் தந்தை பெரியாருக்கு ஒரு சிலையும் அமைக்கப்படும். இந்தப் “ பெரியார் உலகம்” அமைக்க ஏறத்தாழ ருபாய் 100 கோடி ஆகலாம்.

உடனே ஒரு கோயபல்ஸ், படேல் சிலைக்கு 3,000 கோடி, பெரியார் சிலைக்கு 100 கோடியா? என்ன வித்தியாசம்? என்று சங்கியின் குரலாகக் கதறியது.

குஜராத்தில் படேல் சிலைக்கு மட்டுமே 3,000 கோடி செலவு செய்தனர். இங்கே பெரியார் சிலைக்கு மட்டும் இல்லை, ஒட்டு மொத்த பெரியார் உலகத்திற்கே செலவு 100 கோடி வரலாம். அந்த ‘சீமை’ க் கோயபல்ஸ் மண்டைக்கு இவை எல்லாம் எட்டாது, அதுகளைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதும் இல்லை.

எனவே அமையவிருக்கும் திருச்சி, சிறுகனூர் “பெரியார் உலகம்” சிறப்பாகவும், விரைவாகவும் அமைய வேண்டும் என்று வாழ்த்தி, வரவேற்போம் - நாம் !

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024, தொலைபேசி: 044-2472 6408

# குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான தீர்மானம்

● சாரதா தேவி

“புதிதாகப் பொறுப்பேற்றாரா அல்லது புதிதாகப் பிறந்தாரா?!” என்றார் தோழர் சுபவீ. முதல்வரின் ஒவ்வொரு நகர்வும் உள்ளபடியே அனைவரின் மனதில் எழுப்பும் கேள்வி இதுதான். 08.09.2021 அன்று காலை “இந்தியக் குடியிரிமைத் திருத்தச் சட்டம், 2019”-ஐ ரத்து செய்யக் கோரும் அரசினர் தனித்தீர்மானத்தை, தமிழ்நாடு சட்டப்பேரவையில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்து, பேரவையின் பேராதரவுடன் நிறைவேற்றி உள்ளார்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019 மசோதாவாகத் தாக்கல் செய்யப்பட்டு அவசர அவசரமாகச் சட்டமாக்கப் பட்டபோதே இந்த நாட்டின் அனைத்து ஜனநாயக முற்போக்கு அமைப்புகளும் அதனை எதிர்த்து மாபெரும் போரட்டங்களை, தொடர் விவாதங்களை எழுப்பின. ஷாஹீன்பாகுகள் எங்கும் இசுலாமியப் பெருமக்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு தங்களுக்கு நேரவிருக்கும் பேராபத்துக்கு எதிராக முற்போக்கு ஆற்றல்களுடன் இணைந்து போராட்டங்களை ஒருங்கிணைத்தனர். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நீண்ட நெடிய பேரணிகள் நிகழ்த்தப் பெற்றன. பல மாதங்கள் நீடித்த அந்தப் போரட்டங்கள், 2020-இல் கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் அறிவிக்கப்பட்டு ஊரடங்கு நடைமுறைக்கு வந்த பின்பே, வேறு வழியின்றி ஓய்ந்தன.

போராட்டங்களின் விளைவாகச் சட்டப் பாதுகாப்புடன் ஒன்றிய அரசு அறிமுகப்படுத்த இருந்த தேசியக் குடியுரிமைப் பதிவேடு, தேசிய மக்கள்தொகைப் பதிவேடுகள் உருவாக்கல் பணி பல மாநிலங்களில் நிறுத்திவைக்கப் பட்டதாகத் தெரிகிறது. அணுக்கமாக என்னென்ன வேலைகள் நடக்கின்றன என்பது பாதிப்புகள் வெளிப்பட்டால்தான் நாம் தெரிந்து கொள்ள இயலும்.

இந்திய அரசியலமைப்பின் 14வது பிரிவின்படி இந்திய நிலப்பரப்பில் வாழும் எந்தக் குடிமகவும் சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி சமமானச் சட்டப்படியானக் குடியுரிமை உடையவர்கள். 1955 குடியுரிமைச் சட்டம் அப்படித்தான் சொல்கிறது. தற்போதைய இந்துத்துவ ஒன்றிய அரசு இந்த நிலப்பரப்பில் இசுலாமியர்களின் தமிழர்களின் எண்ணிக்கையைக் கொஞ்சம் குறைத்து ஹிந்தி பேசும் இந்துக்களின் விகிதாச்சாரத்தைக் கூட்ட முடியுமா என எண்ணுகிறது. அந்தக் குறுகிய நோக்கத்துக்கு எடுத்துக் கொண்ட ஆயுதம்தான் இந்தத் திருத்தச் சட்டம்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், “பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் இந்தியாவிற்குள் புலம்பெயர்ந்து குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள்,பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறித்தவர்கள்” ஆகியோருக்குக் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. இசுலாமியர் இதில் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டுள்ளனர். அது மட்டுமா? புலம் பெயரும் அண்டை நாடுகளின் பட்டியலில் இலங்கை வெகு கவனமாக விடுபட்டிருக்கிறது. ஒரு கல்லில் இரண்டு மாங்காய்! ஒரு திருத்தத்தால் இரண்டு எதிரிகளைக் குறைக்கும் இராஜ தந்திர நடவடிக்கை அல்லவா? ஆயினும் என்ன செய்ய? எந்தத் தந்திரமும் உண்மைக்கும் நீதிக்கும் புறம்பாக அமைவதை சமூக நீதியின் மைந்தர்கள் ஒருபோதும் பொறுத்துப் போகப் போவதில்லை.

அரசமைப்புச் சட்டத்தின் மதச் சார்பின்மைக்கு எதிராக இசுலாமியர்களை ஒதுக்கும் இந்தச் செயலை பா.ஜ.க ஆளாத எல்லா மாநிலங்களும் எதிர்த்தன. வடகிழக்கு மாநிலங்கள்



போர்க்கோலம் பூண்டன. உக்கிரமானப் போராட்டங்களை ஒருங்கிணைத்தன. இன அழிப்பு நடவடிக்கைகளால், இலங்கையிலிருந்து தாயகம் நோக்கித் தப்பி வரும் ஈழத் தமிழர்களின் உரிமைகள் இழக்கும் ஆபத்தை நாம் மட்டுமே உணர முடியும். அவ்வகையில் இன்றைய முதல்வர் ஸ்டாலின் அவர்கள் அதை அன்றே உணர்ந்திருந்தார்.

இந்தச் சட்டத்திற்கு எதிராக முன்னாள் அ.தி.மு.க அரசு தீர்மானம் நிறைவேற்றாமல் இசுலாமியரைச் சமாதானப்படுத்தும் முயற்சிகளையும், பொய்யான உறுதிகளையுமே அளித்தது. ஈழத் தமிழர்கள் பற்றி அவர்கள் வாய் திறக்கவும் இல்லை. ஆனால் எவ்வித உறுதிமொழியாகவோ, தேர்தல் வாக்குறுதியாகவோ கூடப் பதிவாகவில்லை என்றாலும் தன் நெஞ்சில் வைத்த ஒரு கடப்பாடாக இந்தக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வைக்க ஒரு தொடக்கப் புள்ளியாக ஸ்டாலின் அவர்கள் இந்த அரசு தனித் தீர்மானத்தை நிறைவேற்றிக் காட்டி உள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் அந்த நாட்டில் வாழ முடியாமல் தமிழகம் தப்பி வந்து முகாம்களிலும், வெளியிலும் வாழந்து வருகிறார்கள். மீண்டும் இலங்கைக்குத் திரும்ப விரும்பாமல், இங்கு குடியுரிமைப் பெற்று வாழலாம் என நினைப்பவர்களின் உரிமையை இந்தச் சட்டம் பறிப்பதையும், இலங்கைத் தமிழர்களைப் பற்றி கவலைப்படவில்லை என்பதைவிட அவர்களை வஞ்சிக்கும் செயலைச் செய்வதாக முதல்வர் அத்தீர்மானத்தை எதிர்க்க வேண்டியக் காரணங்களை விளக்கியுள்ளார்.

வரலாற்றில் தங்கள் முயற்சியின்றித் தானே உருவான இந்த நல்வாய்ப்பையும், தீர்மானத்துக்கு முன்னதாகவே வெளிநடப்பு செய்து, இழந்துள்ளனர் அ.தி.மு.க அடிமைகள்.

இந்தத் திருத்தச் சட்டத்தின் படி தேசியக் குடியுரிமைப் பதிவேடும், தேசிய மக்கள்தொகைப் பதிவேடும் உருவானால், இந்த நிலப்பரப்பில் வாழ்ந்த, வாழும் சான்றுகளைத் தர இயலாத எண்ணற்ற எளிய மக்கள், அரசின் எந்தத் திட்டங்களிலும் பங்கு பெறாத கோடானு கோடி மக்கள் தங்கள் குடியுரிமையை நிரூபிக்கப் போராட வேண்டி வரும். இந்தச் சட்டம் நடைபெறும் மோடி அரசின் குறுகிய நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுவதை நாம் தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும். அதற்கான முதல் கல்லை எறிந்து, இந்திய ஒன்றியத்தின் முதன்மையாகப் போற்றப்படும் முதலமைச்சராக மட்டுமல்ல, முதன்மையாகப் பின்பற்றப்படும் முதல்வராகவும் திரு.ஸ்டாலின் உயர்ந்துள்ளார்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian